(6 pages) **Reg. No. : ......................**

**Code No. : 6653** **Sub. Code : HTLM 22**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2013.

Second Semester

Tamil

இலக்கணம் II – சொல் (தொல்காப்பியம் – நன்னூல்)

(For those who joined in July 2012 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

சரியான விடையைத் தேர்ந்து எழுதுக :

1. வினை வேறுபடாஅப் பலபொருள் ஒரு சொல்

   (அ) மா (ஆ) கூ

   (இ) கோ (ஈ) தா

2. ஆக்கந்தானே

   (அ) இற்றெனக் கிளத்தல் (ஆ) காரணமுதற்றே

   (இ) ஆக்கம் கூறுதல் (ஈ) மரபுக்கிளவி

3. கன்றலும் செலவும் ஒன்றுமாறு வருவது

   (அ) பெயரே (ஆ) இடையே

   (இ) உரியே (ஈ) வினையே

4. விளி கொள்ளம் ஈறுகள்

   (அ) கதடற (ஆ) கசடற

   (இ) தநறன (ஈ) ணரலள

5. காளை, விடலை என்னும் பெயர்களுக்குரிய நிலம்

   (அ) பாலை (ஆ) குறிஞ்சி

   (இ) நெய்தல் (ஈ) பாலை

6. கொன்னைச் சொல்லில் வருவது

   (அ) சிறப்பு (ஆ) பெருமை

   (இ) ஐயம் (ஈ) எச்சம்

7. உள்ளது சிறக்கும் பொருளில் வருவது

   (அ) புகழ் (ஆ) இயல்பு

   (இ) கூர்ப்பு (ஈ) விரைவு

8. திரிசொல் வருமிடங்கள்

(அ) 2 (ஆ) 4

(இ) 6 (ஈ) 8

9. நன்னூலார் குறிப்பிடும் வேற்றுமைகள்

(அ) 6 (ஆ) 7

(இ) 8 (ஈ) 9

10. தொல்காப்பியர் கூறும் பொருள்கோள்கள்

(அ) 6 (ஆ) 4

(இ) 5 (ஈ) 8

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்கள் அளவில் விடை தருக.

11. (அ) இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் – விளக்குக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமைப் பொருண்மைகளைக் குறிப்பிடுக.



12. (அ) தொழில் முதல் நிலை எட்டினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) விளியேலாப் பெயர்களை எடுத்துக்காட்டுக.

13. (அ) பாலறிவந்த உயர்திணைப் பெயர்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் கூறும் தெரிநிலை வினையெச்ச வாய்பாட்டினை எடுத்துக்கூறுக.

14. (அ) கடியென் கிளவி உணர்த்தும் பொருள்களைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) செய்யுள் விகாரங்கள் தோன்றும் விதத்தை எழுதுக.

15. (அ) இலக்கணிகள் கூறும் பொருள்கோள் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) வழுவமைதியை இலக்கணிகள் வழிநின்று வெளிப்படுத்துக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்கள் அளவில் விடை தருக.

16. (அ) "கிளவியாக்கம் கூறும் சொற்றொடர் அமைப்பு முறைகளை" ஆய்க.

(அல்லது)

(ஆ) ஐந்து, ஆறாம் வேற்றுமைப் பொருண்மைகளைச் சான்று காட்டி விவரி.

17. (அ) ஒரு பொருளில் ஈருருபு மயங்குதலை உதாரணத்துடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) விளியேற்கும் பெயர்களை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

18. (அ) அஃறிணைப் பெயர்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) எண்ணிடைச் சொற்களைச் சான்றுடன் புலப்படுத்துக.

19. (அ) அகராதியியல் போன்று அமைந்துள்ளது உரியியல் என்னும் கூற்றை நிறுவுக.

(அல்லது)

(ஆ) எச்சவியலில் காணலாகும் மரபியல் ஒழிபிற்குரிய செய்திகளைத் தொகுத்துரைக்க.



20. (அ) வினைச்சொற்களை விளக்குவதில் இலக்கணிகள் எவ்வாறு வேறுபடுகின்றனர்?

(அல்லது)

(ஆ) இடைச்சொல், உரிச்சொல் இலக்கணம் கூறுவதில் இலக்கணிகள் வேறுபடுமிடங்களைப் புலப்படுத்துக.

———————